**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 57/2023**

**வாதி தரப்பு சாட்சி–2 மாணிக்கம் – திருமதி.எஸ்.கோமதி** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1) நான் 12 ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை யார், யார் மீது தாக்கல் செய்துள்ளனர் என்றால் கலிங்கன் அவரது சகோதரர் பெரியசாமி மீது வழக்கு தாக்கல் செய்து, அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் செல்வம், தமிழரசி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பெரியசாமியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் பாலமுத்து. பாலமுத்து எப்போது இறந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பெரியசாமி எப்போது இறந்தார் என்றால் சுமார் 6 வருடங்கள் இருக்கும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை ஏக்கர் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது.

2) நான் நல்லூர் கிராமம் ஆத்தாம்பட்டியில் வசிக்கிறேன். எனது வீட்டின் கதவு எண் 8/96 ஆகும். எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்கெனவே எந்த வருடம் வழக்கு நடந்து தீர்ப்பு ஆனது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வாதி பெயரில் எதாவது ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து வாதிக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியம் என தெரியுமா என்றால், எனக்கு ஆவணங்களைப் பற்றி தெரியாது, அவர்களின் குடும்ப சொத்து. தாவா சொத்திற்கு யார் தீர்வை

செலுத்துகிறார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்துக்களை தற்போதுவரை பிரதிவாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால், அவரவர் நிலங்களை அவரவர் அனுபவித்து வருகிறார்கள்.

3) பிரதிவாதிகளுக்கு எவ்வளவு நிலம் பாத்தியம் என்றும், வாதிக்கு எவ்வளவு நிலம் பாத்தியம் என்றும் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகள் ஒரு வழக்கு தாக்கல் செய்து நடத்தி வரும் விபரம் தெரியுமா என்றால் தெரியும். எனக்கு தாவா சொத்தைப் பற்றியோ, அதற்குரிய ஆவணங்களைப் பற்றியோ எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால், அவர் கேட்டுக்கொண்டதன் பேரில், அவர் தயாரித்த சாட்சிய வாக்குமூலத்தில் கையெழுத்திட்டு, அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**